# நற்றிணையில் நிலவாழ் பறவைகள்

***சு. ராஜலட்சுமி***
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவுஎண் - 19111244022010
ஹோலிகிராஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி, தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

***முனைவர் ஆ. ஜோஸ்பின் ரேணுகா***
நெறியாளர் மற்றும் உதவிப்போராசிரியர், தமிழ்த்துறை
ஹோலிகிராஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி, தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

***முனைவர் சா. தேவநேசம் மேபல்***
இணைநெறியாளர் மற்றும் இணைப்பேராசிரியர், தமிழியல் ஆய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா
https://doi.org/10.5281/zenodo.14383266

***ஆய்வுச் சுருக்கம்***

*உலகம் தழைத்து இனிது ஓங்கப் பண்டைய தமிழ்ப் புலவர்கள் அருளிச் செய்தவை சங்க இலக்கிய நூல்கள் ஆகும். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகிறது. எட்டுத்தொகை நூல்களில் முதலாவதாக இடம் பெற்றுள்ள நூல் நற்றிணை. நற்றிணை 'நல்' என்னும் அடை மொழியும், அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் 'திணை' என்னும் பெயரும் சேர்ந்து நற்றிணை என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இந்நூல் ஒன்பது அடி முதல் பன்னிரெண்டு அடிகள் வரை அமைந்த நானூறு பாடல்களைக் கொண்டது. இதைத் தொகுத்தவர் யார் எனத் தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். இதனை 'நற்றிணை நானூறு' என்றும் கூறுவர். நற்றிணைப் பாடல்கள் அக்கால சமுகத்தை அறிய பெரிதும் துணைபுரிகின்றன. இந்நூல் இயற்கையையும் இயற்கையோடு இயந்த மானிட உணர்ச்சிகளையும் தனித்தன்மையோடு கூறுகிறது. அக்கால மக்களும் புலவர்களும் தாம் வாழும் நிலத்தின் கால நிலைகளையும், புவியியலையும், உயிர்களின் இயக்கங்களையும் இயல்பாகவே அறிந்திருந்தனர்.*

*அனைத்து வகையான தாவரங்கள், விலங்குகள், நிலவாழ் உயிரினங்கள், நீர் நிலவாழ் உயிரினங்கள் என அனைத்தும் நிலப் பண்பாட்டை சார்ந்தது என்பதை சங்க இலக்கியமான நற்றிணையின் வழி அறிய முடிகிறது. தமிழர்கள் நிலத்தோடு தொடர்புடைய அறிவை மிகுதியாகப் பெற்றிருந்தனர். வாழிடங்கள் குறித்த தெளிவும், சூழல் குறித்த அறிவும் சங்க கால மக்களுக்கு இருந்ததை அறிய முடிகிறது. பறவைகளின் வாழிடங்கள், உணவுகள், வாழ்வியல் போன்ற செய்திகள் நற்றிணையில் காணப்படுகிறது. நிலவாழ் பறவைகளை நற்றிணையின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*மஞ்ஞை, பீலி மஞ்ஞை, கூகை, கோட்டன், குடிஞை, குழறும், கான வாரணம், அசுணம் பறவை, கணந்துள், கிளி, குரீஇ.*

**முன்னுரை**

*சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் முதலில் வைத்துப் போற்றப்படும் சிறப்பிற்குரிய நூல் 'நற்றிணை'. சங்ககால மக்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. அகம், புறம் என வாழ்க்கையை இரண்டாகப் பகுத்தனர். நிலத்தை நானிலமாகப் பிரித்து அந்நிலத்துள் முறைமை திரிந்த நிலத்தைப் 'பாலை' எனப் பெயர் கொண்டு ஐந்திணை வகுத்தனர். ஒவ்வொரு திணைக்கும் அந்தந்த நிலப்பகுதியில் சிறந்து விளங்கும் பூ அல்லது மரத்தின் பெயரை நிலத்தின் பெயராக இட்டனர். சங்ககால மக்கள் இயற்கை மீதும் உயிரினங்கள் மீதும் ஆழ்ந்த அன்பும், ஆளுமையும் கொண்டிருந்தனர். நிலவாழ் பறவைகளான மயில், கூகை, கிளி, கோழி, புறா, காக்கை, தூக்கணாங்குருவி, அசுணம் பறவை, கணந்துள், குருவி, குயில் இவைகளை நற்றிணை வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**நிலவாழ் பறவைகள்**

*பறவையியல் என்ற உயிரியல் சார்ந்த துறைப் பற்றி இன்று பரவலாகப் பேசப்படுகிறது. பறவைகள் வாழும் இடங்கள் பற்றிய குறிப்புகள் பறவையியல் மூலம் அறியப் படுகிறது. ஆனால், இன்றைய அறிவியல் கூறுவதை பண்டைய தமிழர்கள் தங்களது நடைமுறை அறிவால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பதிவு செய்துள்ளனர். தொல்காப்பியம் தொடங்கி, தமிழின் சங்க இலக்கிய நூல்கள் அனைத்திலும் இயற்கை மற்றும் உயிரினங்கள் குறித்த செய்திகள் அதிக அளவு காணப்படுகிறது. அதிலும் பறவைகளைப் பற்றிய குறிப்புகள் ஏராளமாக கிடைக்கின்றன. இதனை தொல்காப்பியம்,*

***மாவும் புள்ளும் ஐஅறி வினவே***
***பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.***
***(தொல்காப்பியம்- நூற்பா எண்: 576)***

*விலங்கும், புள்ளும் ஐந்து அறிவுடைய உயிரினங்கள் அவற்றின் இனத்தில் பிறந்த பிற உயிர்களும் ஐந்து அறிவுடைய உயிரினங்களே. இவை தொட்டும், நாவினால் சுவைத்தும், மூக்கினால் முகர்ந்தும், கண்ணினால் பார்த்தும், செவியினால் கேட்டும் இளமைப் பொருளை அறிந்து கொள்ளும்.*

*எனவே ஐந்தறிவு உயிராகப் பறவையினம் பாகுபடுத்தப்பட்டுள்ளது. பறவைகள் 'புள்' என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. பார்ப்பு, பிள்ளை, பறழ், குட்டி ஆகியவை பறவைகளின் இளமைப் பெயர்களாக அறியப்படுகிறது. பெண்இனப் பறவைகள் பெடை, பேடை, பெட்டை, அளகு என்றும் அழைக்கப்படுகிறது. ஆண் இனப்பறவைகள் சேவல், ஏற்றை என்றும் அழைப்பதை மரபியல் மூலம் அறிய முடிகிறது.*

**மயில்**

*ஆண் மயிலுக்கு விசிறி போல விரிந்த தோகை உண்டு. பெண் மயிலுக்கு இத்தகைய தோகை இல்லை. நற்றிணையில் மயிலின் தோகைப் போன்று தலைவியின் கருங்கூந்தல் இருந்ததாக கூறப்படுகிறது. இதனை,*

***மணிபுரை எருத்தின் மஞ்ஞை போல நின்***
***வீபெய் கூந்தல் வீசுவள உளர.***
***(நற்றிணை-பாடல் எண்: 264)***

***கலிமயில் கலாவத்து அன்ன, இவள்***
***ஒலிமென் கூந்தல் நம் வயினானே.***
***(நற்றிணை-பாடல் எண்: 265)***

***விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை***
***பூக்கொய் மகளிரின் தோன்றும் நாட.***
***(ஐங்குறுநூறு-பாடல் எண்: 297)***

***அழகிய மயில் தோகையை விரித்து அசைந்து ஆடுவது போன்று நீயும் நின் கருங்கூந்தலும் அசையுமாறு முற்பட்டு விரைந்து செல்க.***

***பீலி மஞ்ஞை பெடையோடு ஆடும்***
***குன்றநாடன் பிரிவிற் சென்று***
***நன்னுதல் பரந்த பசலை கண்டு,***
***(நற்றிணை-பாடல் எண்: 288)***

***பீலிமஞ்ஞை ஆலும் சோலை***
***அம்கண் அறைய,***

***(நற்றிணை-பாடல் எண்: 357)***

*உயரமான மரக்கிளையில் தோகையை உடைய ஆண்மயில் தன் பெடையோடு இனிதிருந்து இளவெயில் காய்ந்தபடி இருக்க ஆடுகின்ற எழில் உடைய மலை நாட்டுக்குரியவன் நம் தலைவன்.*

**கூகை**

***"குராஅற் கூகையும் இராஅ இசைக்கும்"***

***(நற்றிணை-பாடல் எண்: 218)***

*ஆந்தைச் சேவலும் மகிழ்ச்சியோடு தன் பேடையை அழைத்து நிற்கும்.*

***அலந்தலை ஞெமையத்து இருந்த குடிஞை***
***பொன்செய் கொல்லனின் இனிய தெளிர்ப்பப்***

***(நற்றிணை-பாடல் எண்: 394)***

*ஞெமை மரத்தின் மீது இருந்த ஆந்தை பொன் வேலை செய்யும் கொல்லன் போன்று தட்டும் ஒளியை எழுப்பியது.*

***வேறுபடு குரல வெவ்வாய் கூகையோடு.***

***(புறநானூறு-பாடல் எண்: 359)***

***கொடிய வாயை உடைய ஆந்தை வெவ்வேறு குரலுடன் கூவுகிறது.***

***கூகை சேவல் குராலோடு எறி***
***ஆரிரும் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்.***

***(நற்றிணை-பாடல் எண்: 319)***

*மிக்க பழமையான ஊரின் தெருவில் கூகைச் சேவல் அதன் பெட்டையோடு கூடி மக்கள் இயக்கம் இல்லாத நாற் சந்தியிடத்தில் அச்சம் தருமாறு குரல் கொடுக்கும்.*

**கிளி**

*தினை பயிர்களை கவர வரும் கிளிகளை கிழிகடி கருவிகளைக் கொண்டு கிளிகள் அவற்றை கவராதபடி ஓட்டும் வளமான மலைகளை உடையவன் நம் தலைவன்.*

***பெருங்குரல் கொல்லாச் சிறு பைங்கிளிக்கே.***

***(நற்றிணை-பாடல் எண்: 194)***

***தினைகிளி கடியும் பெருங்கல் நாடன்,***

***(நற்றிணை-பாடல் எண்: 328)***

***பெரும்புனல் கவரும் சிறு கிளி ஓப்பிக்***
***கருங்கால் வேங்கை ஊசல் தூங்கிக்***

***(நற்றிணை-பாடல் எண்: 368)***

***சிறுகிளி முரணிய பெருங்குரல் ஏனல்***
***காவல் நீயென்றோளே***

***(நற்றிணை-பாடல் எண்: 389)***

*தினைக்கதிர்களைக் கிளிகளிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பு என்னுடையதே என்று அன்னை கூறினாள்.*

***சுடுபுன மருங்கில் கழித்த ஏனல்***
***படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே***

***(குறுந்தொகை-பாடல் எண்: 291)***

*பவளம் போலும் சிவந்த வாயுடைய கிளிகள் அக்கதிர்களைக் கவர்ந்து கொண்டு செல்ல மேவும் மலை நாட்டுக்கு உரிய தலைவன்.*

**கோழி**

*காட்டுக்கோழி, சம்பங்கோழி, கம்புட் கோழி எனப் பல வகைப்படும்.*

***உருக்குறு நறுநெய் பால்விதிர்த் தன்ன***
***அரிக்குரல் மிடற்ற அம்நுண் பல்பொறிக்***
***காமரு தகைய கான வாரணம்***
***பெயல்நீர் போகிய வியல் நெடும் புறவில்***
***புலரா ஈர்மணல் மலரக் கெண்டி.***

***(நற்றிணை-பாடல் எண்: 21)***

*உருக்கிய நறுமணம் கமழும் நெய் இடத்தில் பால்துளிகள் சிதறிய நிலையில் அழகிய நுண் புள்ளிகள் விளங்க மேவும் காட்டுக் கோழியின் சேவல் மழை நீரால் விளங்கும் அகன்ற காட்டினிடத்தே புலராத ஈர மணலைப் பறித்து அதில் உள்ள நங்கூழைக் கவர்ந்து அவற்றைத் தன் பெடைக்கு ஊட்டும்.*

***சிலம்பின் போகிய சிதர் கால் வாரணம்.***

***(நற்றிணை-பாடல் எண்: 389)***

***காலைப்பொழுதில் கோழிகள் பழங்குப்பையில் எழுப்பிய புழுதியானது பொன் துகள்கள் போல ஒளி வீசும்.***

***கானக்கோழியோடு இதல் கவர்ந்து உண்டென***

***(புறநானூறு-பாடல் எண்: 320)***

*கானவர் வீட்டு முற்றத்தில் உலர்த்திய தினையை காட்டுக்கோழிகள் உண்ணவரும்.*

**புறா**

ஆண் புறா தன் வாயில் கண்ட சிலந்தி வலை போல் உள்ள நூலினை கண்டு அச்சம் கொண்டது.

*கானப்புறவின் சேவல் வாய்நூல்*
*சிலம்பி யம்சினை வெரூஉம்*
*(நற்றிணை-பாடல் எண்: 189)*

*புன்புறா நீளிடைச் சென்றிசி னோரே*
*(நற்றிணை-பாடல் எண்: 314)*

*பைம்புறப் புறவின் செங்காற் சேவல்*
*களரி ஓங்கிய கனவ முட்கள்ளி*
*(நற்றிணை-பாடல் எண்: 384)*

*மரக்கிளையில் ஆண் புறா ஒன்று வருத்தத்தோடு இருக்க அது தன் பேடையை கூவி அழைக்கும்.*
*மென் சிறகரால் ஆற்றும், புறவு எனவும் உரைத்தனரே*
*(கலித்தொகை-பாடல் எண்: 11)*

*தூதுஉண் அம் புறவு என, துதைந்த நின் எழில் நலம்*
*(கலித்தொகை-பாடல் எண்: 56)*

ஆண் புறா களர் நிலத்தில் உயரமாக வளர்ந்த முட்களைக் கொண்ட கள்ளியின் தலைப்புறத்தில் சுள்ளிகளால் அமைக்கப்பட்ட கூட்டில் குஞ்சுகளை ஈன்று காத்திருக்கும் பேடை உண்ணும் வகையில், நெற்கதிர்களை உண்பிக்கும்.

**காக்கை**

*பச்சி றாக் கவர்ந்த பசுங்கண் காக்கை*
*தூங்கல் வங்கத்துக் கூப்பில் சேர்க்கும்.*
*(நற்றிணை-பாடல் எண்: 258)*

நிழலிடத்தில் குவிக்கப்பெற்ற இறால் மீன்களைக் கவர்ந்து உண்ணும் காக்கைகள் கடல் அலைகளால் அசையும் கூம்பின் இடத்தில் தங்கும்.

*கொடுங்கண் காக்கை கூர்வாய்ப் பேடை*
*நடுங்கு சிறைப் பிள்ளை தழீஇக் கிளை பயிர்ந்து*
*(நற்றிணை-பாடல் எண்: 367)*

சாய்ந்து பார்க்கும் கண்ணும் கூர்மையான வாயும் உடைய காக்கையின் பெடை நடுங்கும் சிறகுகளுடையத் தன் பிள்ளையை தழுவிக் கொண்டு தன் சுற்றத்தைக் கூவி அழைத்து மகிழும்.

*கானக் காக்கை கழிச்சிறகு ஏய்க்கும்*
*(புறநானூறு-பாடல் எண்: 342)*

*கருங்கண் காக்கையொடு கழுகு விசும்பு அகவ*
*(ஐங்குறுநூறு-பாடல் எண்: 314)*

*காட்டில் வாழும் கருமையான கண்களை உடைய காக்கை.*

*தூக்கணாங்குருவி*

*முதுக்குறைக் குரீஇ முயன்று செய் குடம்பை*
*மூங்கில் அம் கழைத் தூங்க ஒற்றும்*
*(நற்றிணை-பாடல் எண்: 366)*

*தூக்கணாங்குருவி செய்தமைத்த கூடு மூங்கிலில் தொங்கியவாறு இருக்க அதனை அசைத்து வருத்தும் வாடைக்காற்று.*

*அசுணம் பறவை*

*மாதர் வண்டின் நயவருந் தீங்குரல்*
*மணநாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும்*
*(நற்றிணை-பாடல் எண்: 244)*

அழகிய வண்டுகள் இசைக்கப் பக்க மலையிடத்தே உள்ள அசுணம் பறவையானது யாழோசை என மயங்கி கேட்கும்.

*கணந்துள்*

*பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ*
*நெடுங்காற் கணந்துளம் புலம்புகொள் தெள்விளி*
*(நற்றிணை-பாடல் எண்: 212)*

நீண்ட கால்களை உடைய கணந்துள் பறவை அப்பார்வை பறவையைக் கண்டு அச்சம் கொண்டு விழிக்கும்.

**குருவி**

*உள்ளூர்க் குரீஇக் கருவுடைத்து அன்ன*
*(நற்றிணை-பாடல் எண்: 231)*

மனையில் உள்ள ஊர்க் குருவியின் முட்டையை உடைத்தார் போன்று பெரிய அரும்புகள் இதழ் விரித்துள்ளன.

*ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன*
*கூம்பிற் சிறகர் மனையுறை குரீஇ*
*(குறுந்தொகை-பாடல் எண்: 46)*

ஆம்பல் பூவினது வாடலை யொத்த குவிந்த சிறகினையுடையதாய், மனையின் கண் உறையும் குருவிகள்.

**குயில்**

*தளிர்கவின் எய்திய தண்நறும் பொதும்பில்*
*சேவலோடு கெழீஇய செங்கண் இருங்குயில்*
*(நற்றிணை-பாடல் எண்: 118)*

***சோலைகளும் குளிர்ந்த நறுமணத்துடன் இனிது விளங்க ஆங்குச் சிவந்த கண்களை உடைய பெண் குயில் தன் துணையாகிய ஆண் குயிலோடு கூவி பொழிந்திருக்கும்.***

***மாவும் வண்தளிர் ஈன்றன குயிலும்***

***(அகநானூறு-பாடல் எண்: 355)***

*மாமரங்கள் செழுமையான தளிர்களை ஈன்றன. குயிலும் அம்மரத்தின் கிளையில் இருந்து இனிது கூவியது.*

## முடிவுரை

*இயற்கை என்பது பரந்து விரிந்த அகண்ட அண்டவெளியில் உள்ள பொருட்கள் ஆன வானமும் பூமியும், காடும் கழனியும், மரமும் மலையும், மலரும் தேனும், பறவைகளும் என அனைத்தும் ஆகும். இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள் அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகிய அனைத்தையும் இணைத்தது இயற்கை எனலாம். உயிரினம், உயிரின அறிவு ஆகியவையும் இயற்கையில் அடங்கும். அத்தகைய உயிரியல் அறிவைப் பழந்தமிழர் பெற்றிருந்தனர். தாம் வாழும் வாழ்க்கையையும், தம்மோடு வாழும் பிற உயிரினங்களின் வாழ்க்கையையும் அறியும் தெளிவான அறிவும், புரிதலும் அவர்களுக்கு இருந்தது என்பதை நற்றிணையில் நிலவாழ் உயிரினங்களின் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது.*

## துணை நூற்பட்டியல்


1. *இராமசுப்பிரமணியம். வ. த, உரையாசிரியர், நற்றிணை, மூன்றாம் பதிப்பு - டிசம்பர் - 2018, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை - 600 017.*
2. *இராமசுப்பிரமணியம்.வ.த, உரையாசிரியர், அகநானூறு, இரண்டாம் பதிப்பு - ஏப்ரல், 2018, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை -600 017.*
3. *துரை இராசாராம். புலவர், உரை யாசிரியர், குறுந்தொகை, மூன்றாம் பதிப்பு - 2011, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை - 600 017.*
4. *இராசமாணிக்கனார். மா, உரையாசிரியர், கலித்தொகை, முதற் பதிப்பு ஆகஸ்ட் - 2011, பூம்புகார் பதிப்பகம், சென்னை - 600 108.*
5. *இராமசுப்பிரமணியம்.வ.த, உரையாசிரியர், ஐங்குறுநூறு, முதற்பதிப்பு ஜூலை - 2011, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை - 600 017.*
6. *துரைசாமிப்பிள்ளை. சு. ஔவை, உரையாசிரியர், புறநானூறு, தொகுதி 1, 2 முதற்பதிப்பு 2009, பூம்புகார் பதிப்பகம், சென்னை - 600 108.*
7. *விவேகானந்தன்.நா, உரையாசிரியர், தொல்காப்பியத்தில் அகப்பொருள், முதற் பதிப்பு - 1999, விவேகானந்தா பதிப்பகம் 47-அ1, மேலச்சூரங்குடி, கோணம் அஞ்சல், நாகர்கோவில்- 2.*